# T-14/T-20/T-39-அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்

Download PDF

1) அகர முதலி ஒன்றை
நாளும் படித்து வருவாய்
நிகரிலாத சொற்கள்
நினைவில் நன்கு பெறுவாய் - என்ற பாடலின் மூலம் தமிழ் வளம் பற்றிக் கூறிய கவிஞர் யார்?

- A. பாரதியார்
- B. பாரதிதாசன்
- C. வாணிதாசன்
- D. முடியரசன்
- E. விடை தெரியவில்லை

2) "தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள், தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது" - என்று திருக்குறளைப் போற்றியவர் யார்?

- A. ஜி.யு.போப்
- B. வீரமாமுனிவர்
- C. ஏரியல்
- D. கிரௌல்
- E. விடை தெரியவில்லை

3) எந்த நிலத்தின் பெருமை கருதி வேந்தனைத் தமிழர் முறைப்படுத்தினர்?

- A. குறிஞ்சி
- B. முல்லை
- C. மருதம்
- D. நெய்தல்
- E. விடை தெரியவில்லை

4) "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்" - என்று பாரதிதாசனைப் புகழ்ந்தவர் யார்?

- A. சுரதா
- B. புதுமைப்பித்தன்
- C. கு.ப.ரா
- D. அ. சிதம்பரநாதன்
- E. விடை தெரியவில்லை

5) தமிழ்ச் சங்கத்தினைக் குறிக்கும் சொற்றொடரில் தவறாகப் பொருந்தியுள்ள இணை எது?

- A. தமிழ் கெழுகூடல் தண்கோள் வேந்தே - புறநானூறு
- B. தமிழ்வேலி - அகநானூறு
- C. கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழின் - திருவாசகம்
- D. "உயர்மதில் கூடலில் பணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்" - மதுரைக்காஞ்சி
- E. விடை தெரியவில்லை

6) கூற்று I : தமிழின் முதன் முதலில் எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டவர்
செந்தமிழ் தேசிகர்
கூற்று II : இவர் தமிழில் குறில் நெடில் எழுத்துகளுக்கு இடையே உள்ள
குறைகளை நீக்கினார்

- A. கூற்று I மட்டும் தவறு

- B. கூற்று II மட்டும் தவறு
- C. கூற்று இரண்டும் தவறு
- D. கூற்று இரண்டும் சரி
- E. விடை தெரியவில்லை

7) செம்மொழிக்குரிய தகுதிப்பாடுகளில் பொருந்தாதது எது?

- A. பிறமொழித் தாக்கமின்மை
- B. நடுவு நிலைமை
- C. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு
- D. இனக்கோட்பாடு
- E. விடை தெரியவில்லை

8) "சமூகத்தில் ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது" என்று விவரிக்கும் பாடலைத் தேர்க.

- A. "சமைப்பது பெண்க ளுக்குத்
  தவிர்க்கொணாக் கடமை"
- B. "மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
  மனோபாவம் வானைப்போல்"
- C. "ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி
  ஒப்பப்பர் ஆகிவிடுவார் உணரப்பா நீ"
- D. "விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
  மானுட சமுத்திரம் நானென்று கூவு"
- E. விடை தெரியவில்லை

9) "ஆயுள் நாள் முழுவதும் தமிழ்மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்கக்கூடிய வாடாத கற்பகப் பூச்செண்டு" என்று யாருடைய பாடலை டி.கே. சிதம்பரநாதர் பாராட்டினார்?

- A. பாரதியார்
- B. நாமக்கல் கவிஞர்
- C. பாரதிதாசன்
- D. தேசிக விநாயகனார்
- E. விடை தெரியவில்லை

10) "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்" - என்ற பாடலின் மூலம் தமிழின் பழஞ்சிறப்பை உணர்த்தியவர் யார்?

- A. பாவலரேறு
- B. பாரதியார்
- C. முடியரசன்
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

11) கூற்று [A] : திராவிடர்களை மலைநில மனிதர்கள் என அழைக்கிறார் கமில்
சுவலபில்
காரணம் [R] : திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்

- A. (A) மற்றும் (R) சரி, (R) - ஆனது (A)-ன் சரியான விளக்கம்.
- B. (A) மற்றும் (R) சரி, (R) - ஆனது (A)-ன் சரியான விளக்கம் அல்ல
- C. (A) சரி ஆனால் (R) தவறு
- D. (A) தவறு ஆனால் (R) சரி
- E. விடை தெரியவில்லை

12) கூர்த்த போர்செயக் கூடினர்க் கொருவன்வந் தெய்திச் சீர்த்த நான் அவன் சிறந்தபோர் தனித்தனி - என்ற பாடல் தேம்பாவணியில் எந்தப் படலத்தில் இடம் பெற்றுள்ளது?

- A. காட்சி படலம்

- B. மகவருள் படலம்
- C. வளன்செனித்த படலம்
- D. கருணையன் மாட்சிப் படலம்
- E. விடை தெரியவில்லை

13) கீழ்க்கண்டவற்றுள் குன்றக்குடி அடிகளார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது 1986ல் வழங்கப்பட்டது.
2. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் 1991ல் வழங்கிச் சிறப்பித்தது.
3. இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக் குழு, 1989ல் தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 3 மட்டும்
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

14) யாருடைய திருக்குறள் மெய்ப்பொருளுரை தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது?

- A. சி. இலக்குவனார்
- B. தனிநாயகம் அடிகள்
- C. தேவநேயப் பாவாணர்
- D. பெருஞ்சித்திரனார்
- E. விடை தெரியவில்லை

15) “பாவாணர் தமிழ் மொழிக்கும் நாட்டுக்கும் இடைவிடாத நல்தொண்டாற்றி நம் அனைவரின் நிலைமையை உயர்த்தியவர். அவரிடமிருந்த புலமை, தெளிவும் துணிவும் மிக்கது” என்று தேவநேயப் பாவாணரைப் பாராட்டியவர் யார்?

- A. அண்ணா
- B. பெரியார்
- C. கலைஞர் மு. கருணாநிதி
- D. பெருஞ்சித்திரனார்
- E. விடை தெரியவில்லை

16) “வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. வாலி
- C. முடியரசன்
- D. கண்ணதாசன்
- E. விடை தெரியவில்லை

17) கூற்று 1 : தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 1977 ஆம் ஆண்டு கலைமாமணி விருது
பெற்றார்.
கூற்று 2 : தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 1978 ஆம் ஆண்டு மத்திய அரசின்
பத்மவிபூஷன் விருது பெற்றார்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

18) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) புலமை மாக்கடல் 1. தேவநேயப் பாவாணர்
(b) மொழி ஞாயிறு 2. சி. இலக்குவனார்
(c) செந்தமிழ் மாமணி 3. உ. வே. சா
(d) பாவலரேறு 4. பெருஞ்சித்திரனார்

- A. 2 3 1 4
- B. 1 2 3 4
- C. 3 1 2 4
- D. 4 2 1 3
- E. விடை தெரியவில்லை

19) கீழ்க்கண்டவற்றுள் தாரா பாரதி பற்றி தவறான கூற்றைத் தேர்க.
1. கவிஞர் தாரா பாரதி 26-2-1948 இல் திருவண்ணாமலை மாவட்டம் குவளை என்னும் சிற்றூரில் பிறந்தார்.
2. இவரின் பெற்றோர் துரைசாமி - புஷ்பம் அம்மாள் ஆவார்.
3. இவர் 35 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

- A. 1 மற்றும் 3
- B. 1 மற்றும் 2
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

20) கூற்று 1 : உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள்.
இவற்றின் மொத்த அடிகள் 23,650.
கூற்று 2 : இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு
எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த
மாக்சுமுல்லர் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிபு.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

21) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக.

- A. புதுக்கவிதை - பாரதியார்
- B. சமுதாயப்புரட்சி - பாரதிதாசன்
- C. சிறுகதை - அறிஞர் அண்ணா
- D. தனித்தமிழ் - மறைமலையடிகள்
- E. விடை தெரியவில்லை

22) திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் தொடர்பான சரியான கூற்றினைத் தேர்க.

- A. திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை புரிவது இல்லை.
- B. பால் காட்டும் விகுதிகளுடன் கூடிய அஃறிணை ஒருமை பகுப்பு
- C. பொருள்களின் தன்மையை ஒட்டிய பாகுபாடு
- D. திராவிடப் பெருமொழிகள் அனைத்தும் திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளைப் பெற்றுள்ளன
- E. விடை தெரியவில்லை

23) “ஏமாற்றும் போர்வையிலே
ஏழைகளின் வேர்வையிலே
எக்காளம் போடுகிற கூட்டம்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. கண்ணதாசன்
- B. பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம்
- C. உடுமலை நாராயண கவி
- D. சுரதா
- E. விடை தெரியவில்லை

24) “பண்டங்கள் ஏற்றிப் பயன்நல்கும் வாணிகத்தால்
கண்டங்கள் சுற்றிக் கலமேறி வந்தவன்தான்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. தாரா பாரதி
- B. கண்ணதாசன்
- C. பாரதியார்
- D. முடியரசன்
- E. விடை தெரியவில்லை

25) புல், தாள், தழை, மடல் ஆகிய சொற்கள் தாவரத்தின் எப்பகுதியைக் குறிக்கின்றன?

- A. தண்டு
- B. வேர்
- C. இலை
- D. பூ
- E. விடை தெரியவில்லை

26) தமிழ் மொழி தொடர்பான வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொள்ள உதவும் சான்றுகளில் சரியானது எது/எவை?
1. இலக்கணங்கள்
2. வெளிநாட்டவர் குறிப்புகள்
3. அகராதிகள்
4. கிளைமொழிகள்
5. கல்வெட்டுகள்

- A. 1, 2 மற்றும் 3
- B. 2, 3 மற்றும் 4
- C. 1, 4 மற்றும் 5
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

27) வீரமாமுனிவர் அவர்களின் காப்பிய நயத்தைப் பற்றிய சரியான கூற்றுகள் எது/எவை?
1. இயற்கையை மனித உணர்ச்சிகளுடன் இணைத்து சித்தரிக்கும் பண்பு காணப்படுகிறது.
2. துயரத்தை வெளிப்படுத்த இயற்கை ஒரு சின்னமாகப் பயன்படுத்தப்படுகிறது.
3. காப்பியத்தில் உள்ள அனைத்துப் பாத்திரங்களும் வரலாற்று ஆதாரமற்றவை.
4. கிறித்தவச் சான்றோர்கள் வாழ்க்கை இலக்கிய வடிவில் சித்தரிக்கப்படுகிறது

- A. 1, 2 மற்றும் 4
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. 1, 2, 3 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

28) பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. பனையேடுதான் புத்தகம். எழுத்தாணியே பேனா- என்று கூறியவர் யார்?

- A. உ.வே.சா
- B. தெ. பொ. மீனாட்சி சுந்தரம்
- C. சி. இலக்குவனார்
- D. தேவநேயப்பாவாணர்
- E. விடை தெரியவில்லை

29) கீழ்க்கண்டவற்றுள் பெரும்பாணாற்றுப்படை பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இந்நூலினைச் ‘சமுதாயப் பாட்டு’ எனத் தமிழண்ணல் அவர்கள் குறிப்பிடுவார்.
2. இந்நூலின் பாட்டுடைத்தலைவன் தொண்டைமான் இளந்திரையன்.
3. இந்நூல் 239 அடிகளைக் கொண்டுள்ளது.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

30) தெ. பொ. மீனாட்சி சுந்தரம் அவர்களால் எந்த இலக்கியத்தில் கூறப்பட்ட வரியும் குரவையும் நாட்டுபுறப் பாடலே என்று நிறுவப்பட்டது?

- A. மணிமேகலை
- B. சூளாமணி
- C. சிலப்பதிகாரம்
- D. குறிஞ்சி பாட்டு
- E. விடை தெரியவில்லை

31) உ. வே. சா- வின் சிறப்புப் பெயர்கள் தொடர்பான தவறான இணையைக் கண்டறிக.
சிறப்புப் பெயர் சூட்டியவர்கள்

- A. தமிழ்த் தாத்தா - கல்கி
- B. மகா மகோபாத்தியாயா - மதராஸ் ஆங்கில அரசு
- C. தாக்ஷனாத்திய கலாநிதி - சங்கராச்சாரியார்
- D. திராவிட வித்யாபூஷணம் - பெரியார்
- E. விடை தெரியவில்லை

32) பல்வேறு தொழில்கள் குறித்த, நாட்டுப்புறப்பாடல்களை ‘மலை அருவி’ என்னும் நூலில் தொகுத்தவர் யார்?

- A. முடியரசன்
- B. தமிழ் ஒளி
- C. நாமக்கல் கவிஞர்
- D. கி.வா. ஜகந்நாதர்
- E. விடை தெரியவில்லை

33) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. வடமொழியில் எழுதப்பட்ட ‘பில்கணீயம்’ என்னும் காவியத்தைத் தழுவித் தமிழில் பாரதிதாசனால் 1938 ல் எழுதப்பட்டது புரட்சிக்கவி.
2. தமிழக அரசு இவருடைய பெயரால் மதுரையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது.
3. பாரதிதாசன் படைப்புகள் 1990-ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும் 2
- C. 2 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

34) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?
1. தெ.பொ.மீ. மிகச்சிறந்த இலக்கியத் திறனாய்வாளர்.
2. இவர் நம் நாட்டுப் பல்கலைக்கழகம் மட்டுமின்றி வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியாராகப் பணியாற்றியுள்ளார்.
3. இவர் தமிழ் மொழியியல் ஆய்வுடன் தொடர்பில்லாதவர்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மட்டும்
- C. 1 மட்டும்
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

35) “தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்றி ஒளிக்கதிராகக் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார்” - என்று கூறியவர் யார்?

- A. பெரியார்
- B. அண்ணா
- C. இராஜாஜி
- D. காந்தி
- E. விடை தெரியவில்லை

36) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதவற்றைத் தேர்க.

- A. ஆலயங்கள் சமுதாய மையங்கள்
- B. நாயன்மார் அடிச்சுவட்டில்
- C. குறட்செல்வம்
- D. அருளோசை
- E. விடை தெரியவில்லை

37) கூற்று 1 : இலக்கணச் செம்மல், செந்தமிழ் மாமணி என்றெல்லாம் பாராட்டப்பட்டவர் சி. இலக்குவனார்.
கூற்று 2 : சி. இலக்குவனாரின் கவிதைகள் 2007 ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

38) தவறான இணைகளைக் கண்டறிக
1. சதுரகராதி - அகரமுதலி
2. கலம்பகம் - சிற்றிலக்கியம்
3. பரமார்த்த குரு கதை - நகைச்சுவை காப்பியம்
4. வேத விளக்கம் - உரைநடை
5. வாமன் கதை - சிற்றிலக்கியம்
6. கருணாம்பரப் பதிகம் - உரைநடை

- A. 1, 2, 3 மற்றும் 4
- B. 1, 2 மற்றும் 4
- C. 3, 5 மற்றும் 6
- D. 5 மற்றும் 6
- E. விடை தெரியவில்லை

39) சி. இலக்குவனார் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?
1. இவரின் இயற்பெயர் இலட்சுமணன்
2. இவரின் வாழ்க்கை வரலாறு நூல் ‘என் வாழ்க்கைப் போர்’.
3. வள்ளுவர் வகுத்த அரசியல், வள்ளுவர் கண்ட இல்லறம், மாணவர் ஆற்றுப்படை ஆகியவை இவர் இயற்றிய நூல்கள்
4. இவரிடம் பயின்ற மாணவர்களில் மு. மேத்தாவும் ஒருவர்

- A. 1, 2 மற்றும் 3
- B. 1, 2 மற்றும் 4
- C. அனைத்தும்
- D. 2, 3 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

40) “முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
மூச்சுப் பெரிதில்லை” - இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

- A. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
- B. பெருஞ்சித்திரனார்
- C. பாரதிதாசன்
- D. சுரதா
- E. விடை தெரியவில்லை

41) சரியாகப் பொருந்தியுள்ள இணைகளைக் கண்டறிக.
அகராதி ஆசிரியர்
1. பட அகராதி - இராமநாதன்
2. தமிழ்ச் சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி - கதிர் வேலனார்

3. திராவிடச் சொற்பிறப்பியல் அகராதி - பரோ, எமினோ
4. பழமொழி அகராதி - புலியூர் கேசிகன்

- A. 1 மற்றும் 3
- B. 1 மற்றும் 2
- C. 2 மற்றும் 4
- D. 3 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

42) கூற்று 1 : யாழ்ப்பாணம் கதிரைவேலனார் வெளியிட்ட தமிழ்ச்சொல்லகராதி
“சங்க அகராதி” என்றும் அழைக்கப்பட்டது.
கூற்று 2 : இதில் சொல்லின் மூலம் தருதல் மற்றும் மேற்கோள் அமைத்தல் என்ற
மரபு பின்பற்றப்பட்டது.

- A. கூற்று 1 மட்டும் சரி
- B. கூற்று 2 மட்டும் சரி
- C. கூற்று இரண்டும் சரி
- D. கூற்று இரண்டும் தவறு
- E. விடை தெரியவில்லை

43) பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் ஆகிய சொற்கள் எந்த நாட்டுத் தமிழ்ச் சொற்கள்?

- A. கொங்கு நாடு
- B. நாஞ்சில் நாடு
- C. குட நாடு
- D. குட்ட நாடு
- E. விடை தெரியவில்லை

44) “முதற்சங்கத்திலிருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழென வழங்கி வரலாயிற்று” - என்ற தொடரில் தமிழின் எப்பண்பு சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

- A. மும்மை
- B. செம்மை
- C. தாய்மை
- D. தூய்மை
- E. விடை தெரியவில்லை

45) பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. சென்னைப் பல்கலைக்கழக அகராதி நன்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.
2. Tamil Lexicon ஆறு தொகுதிகளாக வெளியிடப்பட்டது.
3. இது பவானந்தர் என்பவரால் தொகுக்கப்பட்டது.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

46) பின்வரும் கூற்றுகள் எந்த ஆளுமையைச் சிறப்பாகக் குறிப்பிடுகிறது?
1. 1962 ஆம் ஆண்டு தமிழ்ப் பரப்புரைக் கழகத்தைத் தொடங்கினார்
2. 1936 ல் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றார்.
3. 1965 ல் இந்தி எதிர்ப்பில் கலந்து கொண்டு கைதானார்.

- A. உ.வே. சாமிநாத ஐயர்
- B. சி. இலக்குவனார்
- C. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- D. வாணிதாசன்
- E. விடை தெரியவில்லை

47) பின்வருவனவற்றைப் பொருத்துக
வெளிநாட்டினர் தாய்நாடு
(a) ஜி.யு. போப் 1. கனடா
(b) வீரமாமுனிவர் 2. இத்தாலி
(c) இராபர்ட் கால்டுவெல் 3. அயர்லாந்து
(d) கமில் சுவலபில் 4. செக்

- A. 2 1 3 4
- B. 2 1 4 3
- C. 1 2 4 3
- D. 1 2 3 4
- E. விடை தெரியவில்லை

48) சி. இலக்குவனார் இயற்றிய ஆங்கில நூல்களில் சரியானது எது/எவை?
1. A brief history of Tamil words
2. The making of Tamil grammar
3. Dravidian federation
4. Tholkappiam with critical studies.

- A. 1, 2 மற்றும் 3
- B. 1, 2 மற்றும் 4
- C. அனைத்தும்
- D. 1 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

49) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
2. இவர் தம் கவிதைகளில் பெண்கல்வி, கைம்பெண் மறுமணம், பொதுவுடைமை, பகுத்தறிவு முதலான புரட்சிகரமான கருத்துக்களை உள்வாங்கிப் பாடியுள்ளார்.
3. இவர் மொழி, இனம், குடியாட்சி உரிமைகள் பற்றி தம் பாடல்களில் உரக்க வெளிப்படுத்தியமையால் புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப்பட்டார்.

- A. 1 மட்டும்
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

50) “தமிழ் மொழி உயர வேண்டுமானால் தமிழன் உயர வேண்டும்” - எனக் கூறியவர் யார்?

- A. பெருஞ்சித்திரனார்
- B. உ.வே.சா
- C. சி. இலக்குவனார்
- D. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- E. விடை தெரியவில்லை

51) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) செந்தமிழ்ச் செல்வர் 1. இரா. இளங்குமரனார்
(b) செந்தமிழ் தேசிகர் 2. வீரமாமுனிவர்
(c) செந்தமிழ் அந்தணர் 3. ஜி.யு.போப்
(d) செந்தமிழ்ச் செம்மல் 4. தேவநேயப் பாவாணர்

- A. 2 3 1 4
- B. 1 2 3 4
- C. 3 1 2 4
- D. 4 2 1 3
- E. விடை தெரியவில்லை

52) “விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
மானுட சமுத்திரம் நானென்று கூவு

புவியை நடத்து; பொதுவில் நடத்து!” - இப்பாடலைப் பாடியவர் யார்?

- A. நாமக்கல் கவிஞர்
- B. விடுதலைக் கவி
- C. மக்கள் கவி
- D. புரட்சிக்கவி
- E. விடை தெரியவில்லை

53) “மலை கூட ஒரு நாளில் தேனாகலாம்
மணல் கூடச் சிலநாளில் பொன்னா கலாம்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. கண்ணதாசன்
- C. பாரதிதாசன்
- D. காமராசர்
- E. விடை தெரியவில்லை

54) “மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்” - என்று பெரியாரைப் பற்றிப் புகழ்ந்து கூறியவர் யார்?

- A. கவிமணி
- B. பெருஞ்சித்திரனார்
- C. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

55) கூற்று 1 : இலக்கணச் செம்மல், செந்தமிழ் மாமணி என்றெல்லாம்
பாராட்டப்பட்டவர் சி. இலக்குவனார்.
கூற்று 2 : சி. இலக்குவனாரின் கவிதைகள் 2007 ஆம் ஆண்டு நாட்டுடைமை
ஆக்கப்பட்டன.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

56) கீழ்க்கண்டவற்றுள் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பற்றிய தவறான கூற்றைத் தேர்க
1. இவரை “நீ மீண்டும் தோன்றிய பாரதியடா” என ஜீவானந்தம் கூறியுள்ளார்.
2. இவரை உடுமலை நாராயணகவி “அவர் பேட்டை நான் கோட்டை” எனக் கூறியுள்ளார்.
3. இவர் பாரதியாரால் “எனது வலதுகை” என்று புகழப்பட்டவர்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவும் இல்லை
- E. விடை தெரியவில்லை

57) பின்வரும் இணைகளில் எது/எவை தவறாகப் பொருந்தியுள்ளன?
1. ‘திராவிடம்’ எனும் சொல்லை முதலில் உருவாக்கியவர் - கால்டுவெல்
2. ‘திராவிடம்’ எனும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் - குமரிலபட்டர்
3. ‘திராவிட’ எனும் சொல் தமிழில் இருந்து உருவானது - ஈராஸ் பாதிரியார்
என குறிப்பிட்டவர்
4. ‘தமிழே மிகவும் பண்பட்ட மொழி’ எனக் குறிப்பிட்டவர் - மாக்ஸ் முல்லர்

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 1 மட்டும்

- E. விடை தெரியவில்லை

58) “தேம்பாவணி தமிழ் அன்னையின் கழுத்தில் வாடாத மாலையாகத் திகழ்கின்றது. காவலூர்க் கலம்பகம் கதம்ப மாலையாக் காட்சியளிக்கிறது; தொன்னூல் பொன்னூலாக விளங்குகின்றது; சதுரகராதி முத்தாரமாக மிளிர்கிறது; வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகிறார்” என்று வீரமாமுனிவருக்குப் புகழாரம் சூட்டியவர் யார்?

- A. பூர்ணலிங்கம்
- B. மு. வரதராசனார்
- C. இராமானுசக் கவிராயர்
- D. ரா.பி. சேதுப்பிள்ளை
- E. விடை தெரியவில்லை

59) நடுவணரசு எப்போது தமிழைச் செம்மொழியாக அறிவித்தது?

- A. ஆகஸ்ட், 2004
- B. அக்டோபர், 2004
- C. ஆகஸ்ட், 2007
- D. அக்டோபர், 2007
- E. விடை தெரியவில்லை

60) கீழ்க்கண்டவற்றுள் முடியரசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவரின் காலம் 07.10.1920 முதல் 03.12.1998 -ஆம் ஆண்டு வரை வாழ்ந்தார்.
2. இவரின் இயற்பெயர் துரைராசு.
3. இவர் பூங்கொடி, வீரகாவியம், காவியப்பாவை, பாவியக் கொத்து ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

61) “நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில்” - இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

- A. நாமக்கல் கவிஞர்
- B. பெருஞ்சித்திரனார்
- C. பாரதிதாசன்
- D. பாரதியார்
- E. விடை தெரியவில்லை

62) “தாய்மொழியாகிய தமிழ் வாயிலாகவே பல்கலைக்கழகக் கல்வி தமிழின் அமைய வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்டவர்” என்று இலக்குவனாரைப் பாராட்டியவர் யார்?

- A. பாரதிதாசன்
- B. முடியரசன்
- C. மு. வரதராசன்
- D. தேனரசன்
- E. விடை தெரியவில்லை

63) கீழ்க்கண்டவற்றுள் உருத்திரங் கண்ணனார் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் பெரும்பாணற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவற்றை படைத்துள்ளார்.
2. இவர் சைவ சமயத்தில் பற்றுடையவர்.
3. இவர் தொண்டைமான் இளந்திரையனாலும், சோழன் கரிகாற் பெருவளத்தானாலும் ஆதரிக்கப் பெற்றவர்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

64) “அதிசயப் பெண்” என்ற நூலின் ஆசிரியர் யார்?

- A. முடியரசன்
- B. தமிழ் ஒளி
- C. கி.வா.ஜகந்நாதர்
- D. நாமக்கல் கவிஞர்
- E. விடை தெரியவில்லை

65) “பாட்டாளி மக்களதுபசிதீர வேண்டும்
பணமென்ற மோகத்தின் விசை தீர வேண்டும்” - இது யார் கூற்று?

- A. கவிமணி
- B. காந்தியக் கவிஞர்
- C. பாரதிதாசன்
- D. பாரதியார்
- E. விடை தெரியவில்லை

66) கூற்று 1 : வீரமாமுனிவர் இயற்றிய தொன்னூல் விளக்கம் என்னும் நூல் ஐந்து
இலக்கணங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது
கூற்று 2 : ‘சதுரகராதி’ உருவாக்கி நிகண்டுக்கு ஒரு மாற்றைக் கொண்டு வந்தார்

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

67) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் நூல்களில் எத்தனை இணைகள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளன?
1. பொதுவுடமையை வலியுறுத்தும் நூல் - சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
2. கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் நூல் - குடும்ப விளக்கு
3. இயற்கையை வருணிக்கும் நூல் - அழகின் சிரிப்பு
4. கல்லாத பெண்களின் இழிவைக்கூறும் நூல் - இருண்ட வீடு

- A. ஓர் இணை
- B. இரு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. நான்கு இணைகள்
- E. விடை தெரியவில்லை

68) பரிதிமாற் கலைஞர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?

- A. மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவ முயன்றவர்களுள் ஒருவர்
- B. திராவிட சாஸ்திரி எனும் சிறப்புப் பட்டம் பெற்றவர்
- C. தமிழ் மொழி உயர்தனிச் செம்மொழி என முதன் முதலில் நிலைநாட்டியவர்
- D. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கத்தின் எண்பத்தொரு பாடல்களுக்கு உரையெழுதி உரையாசிரியராகவும் விளங்கினார்.
- E. விடை தெரியவில்லை

69) “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. பாரதியார்
- B. முடியரசன்
- C. தாரா பாரதி
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

70) சி. இலக்குவனாரின் சிறப்புப் பெயர்கள்/ பட்டங்கள் தொடர்பாக சரியானவற்றைக் கண்டறிக.
1. தமிழ் அரிமா
2. 20ஆம் நூற்றாண்டு இளங்கோ
3. 20ஆம் நூற்றாண்டு செந்நாப் போதர்
4. தற்கால நக்கீரர்
5. தமிழர் தளபதி
6. செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்

- A. 1, 2, 3 மற்றும் 4
- B. 1, 2, 4, 5 மற்றும் 6
- C. மேற்கண்ட அனைத்தும்
- D. 1, 2, 3, 5 மற்றும் 6
- E. விடை தெரியவில்லை

71) “கொள்வதூஉம் மிகை கொள்ளாது; கொடுப்பதூஉம் குறைபாடாது” - என்ற தொடரின் மூலம் வணிகர்களைப் பெருமைப்படுத்திய நூல் எது?

- A. புறநானூறு
- B. பட்டினப்பாலை
- C. சிலப்பதிகாரம்
- D. மதுரைக்காஞ்சி
- E. விடை தெரியவில்லை

72) கீழ்க்கண்டவற்றுள் இரசிகமணி பற்றி பொருந்தாததைத் தேர்க.

- A. வழக்கறிஞர்
- B. சென்னை மாநிலக் கீழவை உறுப்பினர்
- C. அறநிலையத்துறை ஆணையர்
- D. திறனாய்வாளர்
- E. விடை தெரியவில்லை

73) உ. வே. சா அவர்களுக்கு டாக்டர் பட்டம் எந்தப் பல்கலைகழக்கத்தால் வழங்கப்பட்டது?

- A. சென்னைப் பல்கலைக்கழகம்
- B. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
- C. அண்ணா பல்கலைக்கழகம்
- D. அண்ணாமலை பல்கலைக்கழகம்
- E. விடை தெரியவில்லை

74) “குடந்தை நகர்க் கலைஞர் கோவே பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்”- என்ற தொடரின் மூலம் உ.வே.சாவைப் பெருமைப்படுத்தியவர் யார்?

- A. பாரதியார்
- B. பாரதிதாசன்
- C. வாணிதாசன்
- D. முடியராசன்
- E. விடை தெரியவில்லை

75) கீழ்க்கண்டவற்றுள் வீரமாமுனிவருடன் தொடர்புடையதைத் தேர்க.
1. கிறிஸ்துவ மதப்பரப்பாளர்
2. மொழி பெயர்ப்பாளர்
3. உரைநடையாளர்
4. தொகுப்பாளர்
5. பதிப்பாளர்

- A. 1, 2, 3 மற்றும் 4
- B. 1, 2 மற்றும் 4
- C. மேற்கண்ட அனைத்தும்
- D. 5 மட்டும்

- E. விடை தெரியவில்லை

76) “இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்” என்று காயிதே மில்லத் அவர்களைப் பாராட்டியவர் யார்?

- A. பெரியார்
- B. அண்ணா
- C. இராஜாஜி
- D. காந்தி
- E. விடை தெரியவில்லை

77) திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் முழுவதும் கடமையாகக் கொண்டவர் யார்?

- A. ஜி.யு. போப்
- B. பரிமேலகழகர்
- C. குன்றக்குடி அடிகளார்
- D. கவிமணி
- E. விடை தெரியவில்லை

78) இலக்குவனார் தொடர்பான கூற்றுகளில் எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?
1. மொழிப்போரில் கைது செய்யப்பட்ட முதல் பேராசிரியர் இலக்குவனார்.
2. “தன்மானத் தமிழ் மறவர்” என்று போற்றப்பட்டார்.
3. ‘குறள்நெறி’ நூலின் ஆசிரியர்.
4. கருமவீரர் காமராசர் என்ற ஆராய்ச்சி நூலையும் இயற்றினார்.

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. நான்கு இணைகள்
- E. விடை தெரியவில்லை

79) “தமிழ் மொழியின் உயர்விற்கும் உழைப்பதே எனது உறுகடன்” என்று கூறியவர் யார்?

- A. பெருஞ்சித்திரனார்
- B. உ.வே.சா
- C. சி. இலக்குவனார்
- D. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- E. விடை தெரியவில்லை

80) கூற்று : திராவிட மொழிகளில் பிற மொழிகளின் தாக்கம் மிகக் குறைவாக
உள்ள மொழி தமிழ்
காரணம் : தமிழ் மொழி திராவிட மொழிகள் சிலவற்றின் தாய் மொழியாகக்
கருதப்படுகிறது

- A. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி
- B. கூற்று சரி; காரணம் தவறு
- C. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
- D. கூற்று தவறு; காரணம் சரி
- E. விடை தெரியவில்லை

81) “மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. மு.வ
- B. பெரியார்
- C. அண்ணா
- D. பாரதிதாசன்

- E. விடை தெரியவில்லை

82) பின்வருவனவற்றைப் பொருத்துக
நிகண்டு ஆசிரியர்
(a) அகராதி நிகண்டு 1. காங்கேயர்
(b) தொகை நிகண்டு 2. சிதம்பர ரேவண சித்தர்
(c) உரிச்சொல் நிகண்டு 3. சுப்பிரமணியக் கவிராயர்
(d) பொருள் தொகை நிகண்டு 4. சுப்பிரமணிய பாரதி

- A. 2 4 1 3
- B. 3 1 4 2
- C. 3 1 2 4
- D. 2 3 1 4
- E. விடை தெரியவில்லை

83) ‘உலகம் ஐம்பூதங்களால் ஆனது’ என்று குறிப்பிடும் இரண்டு நூல்கள் எவை?

- A. தொல்காப்பியம், அகநானூறு
- B. புறநானூறு, பரிபாடல்
- C. தொல்காப்பியம், புறநானூறு
- D. அகநானூறு, பரிபாடல்
- E. விடை தெரியவில்லை

84) கூற்று 1 : 18-ம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட தேம்பாவணி 36 படலங்களைக்
கொண்டது
கூற்று 2 : வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்சுடான்டின் ஜோசப் பெசுகி

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

85) கீழ்க்கண்டவற்றுள் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பற்றிய தவறான கூற்றைத் தேர்க
1. இவரை ‘மக்கள் கவிஞர்’ என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுபவர்.
2. இவர் வாழ்ந்த காலம் 13.05.1930 முதல் 08.10.1959.
3. இவர் பட்டுக்கோட்டை அருகே உள்ள செங்கப்படுத்தான்காடு என்னும் ஊரில் பிறந்தவர்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 2 மற்றும் 3
- D. 1, 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

86) கீழ்க்கண்டவற்றுள் முடியரசனின் நூலைத் தேர்க.

- A. கன்னிப்பாவை
- B. தைப்பாவை
- C. காவியப்பாவை
- D. கற்பாவை
- E. விடை தெரியவில்லை

87) “பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே
மூட்டை சுமந்தான் பின்னாலே” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. தாரா பாரதி
- B. கண்ணதாசன்

- C. தமிழ் ஒளி
- D. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- E. விடை தெரியவில்லை

88) கீழ்க்கண்டவற்றில் கண்ணதாசனின் புனைபெயர்களில் பொருந்தாததைத் தேர்க.

- A. பார்வதிநாதன்
- B. காரை முத்துப்புலவர்
- C. கமகப்பிரியா
- D. முத்தையா
- E. விடை தெரியவில்லை

89) “மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!” - என்ற பாடலின் ஆசிரியர் யார்?

- A. பெருஞ்சித்திரனார்
- B. தேவநேயப்பாவாணர்
- C. சி. இலக்குவனார்
- D. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- E. விடை தெரியவில்லை

90) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணைகளைக் கண்டறிக.
1. தமிழின் தொன்மையை உலகறியச் செய்தவர் - கால்டுவெல்
2. தனித்தமிழுக்கு வித்திட்டவர் - மறைமலையடிகள்
3. தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் - பரிதிமாற் கலைஞர்
4. தமிழை ஆழமாக வளர்த்து மாண்புறச் செய்தவர் - தேவநேயப் பாவாணர்

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 3 மற்றும் 4
- D. 1 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

91) வீரமாமுனிவர் சிறப்புப் பெயர்களில் சரியானவை எவை?
1. தமிழ் சிறுகதையின் முன்னோடி
2. தமிழ் உரைநடையின் தந்தை
3. தமிழ் அகராதியின் தந்தை
4. மொழிபெயர்ப்பு துறையின் வழிகாட்டி
5. செந்தமிழ் தேசிகர்

- A. 1, 2, 3 மற்றும் 4
- B. 1, 2 மற்றும் 4
- C. மேற்கண்ட அனைத்தும்
- D. 1 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

92) தேவநேயப் பாவாணர் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது/எவை?
1. தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்று கூறினார்
2. இவரின் பெயரில் பெரியார் சாலையில் மாவட்ட மைய நூலகம் செயல்பட்டு வருகிறது
3. நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவ முயன்றவர்களில் இவரும் ஒருவர்
4. இவரின் படைப்புகள் 1995-ம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டன

- A. 1 மற்றும் 4
- B. 1 மட்டும்
- C. 2, 3 மற்றும் 4
- D. 1, 2 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

93) 1934 -ம் ஆண்டு சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடத்தியவர் யார்?

- A. பெருஞ்சித்திரனார்
- B. தேவநேயப் பாவாணர்
- C. சி. இலக்குவனார்
- D. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- E. விடை தெரியவில்லை

94) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக

- A. சினை - கிளையின் பிரிவு
- B. கழி - கரும்பின் அடி
- C. விறகு - காய்ந்த குச்சி
- D. சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
- E. விடை தெரியவில்லை

95) கூற்று 1 : இந்தியாவில் மட்டும் 179 இலக்கிய வளமொழிகளும் 544 கிளை மொழிகளும் உள்ளன.
கூற்று 2 : தமிழ மொழியில் மெல்லொலிகள் மிகுந்திருப்பதே அதன் தொன்மைக்குக் காரணமாகக் கருதப்படுகிறது

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

96) “நீலவான் மறைக்கும் ஆல்தான்
ஒற்றைக்கால் நெடிய பந்தல்!” - இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

- A. பாரதிதாசன்
- B. பெருஞ்சித்திரனார்
- C. பாவாணர்
- D. பாரதியார்
- E. விடை தெரியவில்லை

97) பின்வரும் இணைகளில் எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?
பெயர் இயற்பெயர்
1. தேவநேயப் பாவாணர் - தேவநேசன்
2. சி. இலக்குவனார் - இலட்சுமணன்
3. முடியரசன் - துரைராசு
4. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் - அரங்கநாதன்

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

98) பின்வரும் இணைகளில் எத்தனை இணைகள் சரியானவை?
சொல் இடம் பெற்ற நூல்
I. வெள்ளம் - பதிற்றுப்பத்து
II. புகழ் - தொல்காப்பியம்
III. ஊர் - திருக்குறள்
IV. பார் - பெரும்பாணாற்றுப்படை

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

99) கீழ்க்கண்டவற்றில் சரியான இணையைத் தேர்க.
1. பகுத்தறிவுக் கவிராயர் - பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்
2. உவமைக் கவிஞர் - சுரதா
3. காந்தியக் கவிஞர் - வெ. இராமலிங்கனார்
4. புரட்சிக் கவிஞர் - பாரதிதாசன்

- A. 1 மற்றும் 3
- B. 1, 2 மற்றும் 4
- C. 1, 2, 3 மற்றும் 4
- D. 2, 3 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

100) “பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி” - என்று பாரதிதாசனைப் புகழ்ந்தவர் யார்?

- A. சுரதா
- B. புதுமைப்பித்தன்
- C. கு.ப.ரா
- D. அ. சிதம்பரநாதன்
- E. விடை தெரியவில்லை

101) கீழ்க்கண்டவற்றுள் டி.கே.சி பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.
2. இவர் தமது வீட்டில் ‘வட்டத்தொட்டி’ என்னும் பெயரில் இலக்கணக் கூட்டங்களை நடத்தி வந்தார்.
3. இவர் எழுதிய ‘திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்’ என்னும் கட்டுரை இவரது ‘இதய ஒலி’ என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும் 2
- C. 1 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

102) கீழ்க்கண்டவற்றில் காயிதே மில்லத் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இந்திய அரசியலமைப்பு உருவாக்கக் குழு உறுப்பினராகப் பணியாற்றினார்.
2. இந்தியா விடுதலை பெற்றபின் சட்டமன்ற உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.
3. திருச்சியில் ஜமால் முகம்மது கல்லூரி, கேரளாவில் ஃபரூக் கல்லூரி ஆகியவற்றைத் தொடங்க அவரே காரணமாக இருந்தார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

103) கீழ்க்கண்டவற்றுள் தவறாகப் பொருந்தியுள்ள இணையைக் கண்டறிக

- A. வறிது நிலை இய காயமும் - புறநானூறு
- B. வலவன் ஏவா வானூர்தி - புறநானூறு
- C. தீம்பிழி எந்திரம் பந்தல் வருந்த - பதிற்றுப் பத்து
- D. அந்தக் கேணியும் எந்திரக்கிணறும் - பதிற்றுப் பத்து
- E. விடை தெரியவில்லை

104) தேம்பாவணி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. “தேம்பாவணி” என்ற பெயர் “தேம்பா + அணி” எனப் பிரிக்கப்படும் போது “தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு” என்ற பொருள் தருகிறது.
2. “தேன் + பா + அணி” எனப் பிரிக்கப்படும் போது “வாடாத மாலை” என்ற பொருள் தருகிறது.
3. இந்தக் காப்பியம் சூசையப்பர் (யோசேப்பு) அவர்களைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
4. இந்நூல் 3 காண்டங்களையும் 36 படலங்களையும்; 3165 பாடல்களையும் கொண்டுள்ளது.

- A. 1 மற்றும் 2

- B. 2 மற்றும் 4
- C. 3 மட்டும்
- D. 1 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

105) தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்ட தமிழ் மொழி இடம் பெற்ற கல்வெட்டு எது?

- A. அசோகர் கல்வெட்டு
- B. உத்திரமேரூர் கல்வெட்டு
- C. அரச்சலூர் கல்வெட்டு
- D. மாங்குளம் கல்வெட்டு
- E. விடை தெரியவில்லை

106) கீழ்க்கண்டவற்றுள் குன்றக்குடி அடிகளார் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித் தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர்
2. இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர்.
3. இவர் 1967-ல் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

- A. 1 மட்டும்
- B. 3 மட்டும்
- C. 1, 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

107) “உழுவார் எல்லாம் மலைபோல் எருதை
ஒட்டிப் பொன்னேர் பூட்டவும்” - இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

- A. பாரதியார்
- B. முடியரசன்
- C. தாரா பாரதி
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

108) பின்வருவனவற்றைப் பொருத்துக
மாணவர் தமிழ் கற்றுக் கொடுத்தவர்கள்
(a) ஜி.யு. போப் 1. சுப்பரதீபக் கவிராயர்
(b) வீரமாமுனிவர் 2. மகாவித்துவான் சபாபதியார்
(c) பரிதிமாற்கலைஞர் 3. இராமானுசக் கவிராயர்
(d) கலைஞர் கருணாநிதி 4. சி. இலக்குவனார்

- A. 2 1 3 4
- B. 3 1 4 2
- C. 3 1 2 4
- D. 2 3 1 4
- E. விடை தெரியவில்லை

109) தேவநேயப் பாவாணர் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது/எவை?
1. தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் தந்தை
2. மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் எனும் தலைப்பில் தஞ்சையில் சொற்பொழிவாற்றினார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

110) “புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது!” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. மாங்கனி
- B. ஆட்டனத்தி ஆதிமந்தி
- C. காலக்கணிதம்
- D. சேரமான் காதலி
- E. விடை தெரியவில்லை

111) எதற்கும் பயன்படாத நிலத்தை வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

- A. உவர் நிலம்
- B. களர் நிலம்
- C. செம்மண் நிலம்
- D. முல்லை நிலம்
- E. விடை தெரியவில்லை

112) அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகக் காரணமாக இருந்தவர் யார்?

- A. தனிநாயகம் அடிகள்
- B. பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- C. தேவநேய பாவாணர்
- D. முடியரசன்
- E. விடை தெரியவில்லை

113) “எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்” - இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. அழகின் சிரிப்பு
- B. தமிழ் வளர்ச்சி
- C. இளைஞர் இலக்கியம்
- D. இருண்ட வீடு
- E. விடை தெரியவில்லை

114) ஜி.யு.போப் முதலில் தமிழில் உரை நிகழ்த்திய இடம் எது?

- A. தஞ்சை
- B. நெல்லை
- C. தூத்துக்குடி
- D. சென்னை
- E. விடை தெரியவில்லை

115) பின்வரும் இணைகளில் எத்தனை இணைகள் சரியாகப் பொருந்தியுள்ளன?
(உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டு - நடைபெற்ற இடம்)
I. 1970 - சென்னை
II. 1968 - பாரீசு
III. 1987 - மதுரை
IV. 1994 - தஞ்சாவூர்

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. மேற்கண்ட எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

116) பாரதிதாசன் ‘குடும்பவிளக்கு’ என்னும் நூலில் எப்பகுதியில் ‘விருந்தோம்பல்’ எனும் தலைப்பில் கவிதை படைத்துள்ளார்?

- A. ஐந்தாம் பகுதி
- B. முதல் பகுதி
- C. நான்காம் பகுதி
- D. இரண்டாம் பகுதி

- E. விடை தெரியவில்லை

117) கீழ்க்கண்டவற்றுள் இரசிகமணியுடன் பொருந்தாததைத் தேர்க.

- A. தமிழிசைக் காவலர்
- B. வளர்தமிழ் ஆர்வலர்
- C. செந்தமிழ்ச் செம்மல்
- D. குற்றால முனிவர்
- E. விடை தெரியவில்லை

118) தேவநேய பாவாணரின் படைப்புகளில் சரியானவை எவை?
1. தமிழ் வரலாறு 2. திருலோக மாலை
3. தமிழர் திருமணம் 4. ஆனந்த வள்ளி அம்மை
5. திருக்குறள் மரபுரை

- A. 1, 2 மற்றும் 3
- B. 3, 4 மற்றும் 5
- C. 1, 2, 3, 4 மற்றும் 5
- D. 1, 3 மற்றும் 5
- E. விடை தெரியவில்லை

119) கீழ்க்கண்டவற்றில் காயிதே மில்லத் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. கண்ணியமிகு காயிதே மில்லத் அவரது இயற்பெயர் முகம்மது இசுமாயில் ஆனால் மக்கள் அவரை அன்போடு ‘காயிதே மில்லத்’ என்று அழைத்தனர்.
2. காயிதே மில்லத் என்னும் கிரேக்க சொல்லுக்குச் ‘சமுதாய வழிகாட்டி’ என்று பொருள்.
3. காயிதே மில்லத் 1948 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

120) “செந்தமிழ்ச் சொல்லெடுத்து இசை தொடுப்பேன்
வண்ணச் சந்தத்திலே கவிதைச்சரம் தொடுப்பேன்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. சுரதா
- B. கண்ணதாசன்
- C. முடியரசன்
- D. தமிழ் ஒளி
- E. விடை தெரியவில்லை

121) கூற்று 1 : நிகண்டுகளில் பழைமையானது சூடாமணி நிகண்டு.
கூற்று 2 : இந்நூலின் ஆசிரியர் மண்டல புருடர்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

122) பின்வரும் கூற்றுகளில் தவறானது எது/எவை?
I. அச்சுக் கோப்புக்காக தமிழ் எழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டிய குறையைப் போக்க எழுத்துச் சீர்த்திருத்தம் மேற்கொண்டவர் தந்தை பெரியார்
II. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங்கள் அனைத்தும் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன

- A. I மட்டும்

- B. II மட்டும்
- C. அனைத்தும்
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

123) நவமணி வடக்க யில்போல் நல்லறப் படலைப் பூட்டும் தவமணி மார்பன் சொன்ன தன்னிசைக்கு இசைகள் - என்ற வீரமாமுனிவர் பாடலடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

- A. திருக்காவலூர்க் கலம்பகம்
- B. கித்தேரி அம்மாள் அம்மானை
- C. தொன்னூல் விளக்கம்
- D. தேம்பாவணி
- E. விடை தெரியவில்லை

124) ‘மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்’ என்ற அடிகளில் எது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?

- A. சங்க காலத்தில் மதுரையில் சங்கம் இருந்தது
- B. சங்க காலத்தில் தமிழில் மொழி பெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது
- C. இராமாயண, மகா பாரத செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன
- D. (A) மற்றும் (B) இரண்டும்
- E. விடை தெரியவில்லை

125) வீரமாமுனிவர் உருவாக்கிய அகர முதலி வகைகளில் தவறானது எது/எவை?
1. தமிழ் - இலத்தீன் அகராதி
2. தமிழ் - பிரெஞ்சு அகராதி
3. தமிழ் - தமிழ் அகராதி
4. போர்த்துகீசிய - இலத்தீன் தமிழ் அகராதி
5. தமிழ் - ஆங்கிலம்

- A. 3 மற்றும் 4
- B. 3 மட்டும்
- C. 1, 2 மற்றும் 5
- D. 5 மட்டும்
- E. விடை தெரியவில்லை

126) தேவநேயப் பாவாணர் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?

- A. தமிழ்ச் சொல்லயாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்
- B. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி திட்ட இயக்குனராகப் பணியாற்றியவர்.
- C. உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் நிறுவனர்
- D. தமிழ் மொழி 16 செவ்வியல் தன்மைகளைக் கொண்டது எனக் கூறியவர்
- E. விடை தெரியவில்லை

127) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) உ.வே.சா 1. 1902 - 1981
(b) பாவாணர் 2. 1933 - 1995
(c) சி. இலக்குவனார் 3. 1855 - 1942
(d) பெருஞ்சித்திரனார் 4. 1909 - 1973

- A. 2 4 3 1
- B. 3 1 4 2
- C. 3 1 2 4
- D. 2 4 1 3
- E. விடை தெரியவில்லை

128) கூற்று 1 : கான்ஸ்டாண்டின் என்ற அரபு சொல்லுக்கு அஞ்சாதவன் என்று பொருள்.
கூற்று 2 : தமிழ்ப்பற்றினால் ‘தைரியநாதர்’ என முதலில் சூட்டிக்கொண்ட தம்
பெயரைத் தனித் தமிழாக்கி! ‘வீரமாமுனிவர்’ என சூட்டிக் கொண்டார்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

129) பின்வருவனவற்றைப் பொருத்துக
சொல் முதலில் ஆளப்படும் இலக்கியம்
(a) தமிழ் 1. தேவாரம்
(b) தமிழன் 2. சிலப்பதிகாரம்
(c) தமிழ்நாடு 3. தொல்காப்பியம்
(d) அரசு 4. திருக்குறள்

- A. 2 4 3 1
- B. 2 1 3 4
- C. 3 1 2 4
- D. 2 4 1 3
- E. விடை தெரியவில்லை

130) “திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்” - இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. தமிழச்சியின் கத்தி
- B. அழகின் சிரிப்பு
- C. பாரதிதாசன் கவிதைகள்
- D. பிசிராந்தையார்
- E. விடை தெரியவில்லை

131) ஜி.யு. போப் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. ஐரோப்பியர்கள் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வதற்குரிய நூல் ஒன்றை (Tamil Hand Book) எழுதினார்.
2. தமிழ் மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, ஆங்கிலத்தில் எழுதிப் பதிப்பித்தார்.
3. தாய் மொழிக் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

132) கீழ்க்கண்டவற்றுள் சரியான இணைகளைக் கண்டறிக.
1. முதல் சங்கம் - காய்ச்சின வழுதி முதல் முடத்திருமாறன் வரை
2. இடைச் சங்கம் - முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை
3. கடைச் சங்கம் - உக்கிரப் பெருவழுதி முதல் கடுங்கோன் வரை

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

133) “நகைசெய் தன்மையி னம்பெழீ இத்தாய்துகள் பகைசெய் நெஞ்சமும் பற்றலு மொன்றுற” என்ற பாடலடிகளின் ஆசிரியர் யார்?

- A. ஜி.யு.போப்
- B. வீரமாமுனிவர்
- C. கால்டுவெல்
- D. பாவலரேறு
- E. விடை தெரியவில்லை

134) கீழ்க்கண்டவற்றுள் தாரா பாரதி பற்றி சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் நல்லாசிரியருக்கான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெற்றவர்.
2. இவரின் இயற்பெயர் கவிஞாயிறு.
3. இவர் புதிய விடியல்கள், இது எங்கள் கிழக்கு, பூமியைத் திறக்கும் பொன்சாவி ஆகிய நூல்களைப் படைத்துள்ளார்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

135) கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றைத் தேர்க.
1. வேலுநாச்சியாரை “தென் இந்தியாவின் ஜான்சிராணி” என்று அழைக்கப்படுகின்றனர்.
2. வேலுநாச்சியார் இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் மகள்.
3. வேலுநாச்சியார் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்தார்.

- A. 1 மட்டும்
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

136) “கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதிரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்” - என்ற தொடரின் மூலம் திராவிட மொழிகள் தமிழ் பெற்ற சேய்கள் எனக்குறிப்பிட்டவர் யார்?

- A. உ. வே. சா
- B. தேவநேய பாவாணர்
- C. பெ. சுந்தரம் பிள்ளை
- D. சுப்புரமணிய சாஸ்திரி
- E. விடை தெரியவில்லை

137) தமிழின் அரிய தன்மைகளை நடுவுநிலைமையில் இருந்து எடுத்துக் காட்டிய ஐரோப்பியர்கள் யார்?
1. வின்ஸ்லோ
2. டெய்லர்
3. ஜி யு. போப்
4. விட்னி
5. ஜான் மர்டாக்
6. கெல்லட்

- A. 1, 2, 3 மற்றும் 4
- B. 2, 3, 4 மற்றும் 5
- C. 1, 2, 5 மற்றும் 6
- D. மேற்கண்ட அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

138) வீரமாமுனிவர் தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?
1. வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் அவர்களைச் சந்திக்க உரையாடுவதற்காக ஒரே மாதத்தில் உருது மொழியை கற்றுக்கொண்டார்.
2. சந்தாசாகிப், வீரமாமுனிவருக்கு “இஸ்மத் சன்னியாசி” என்னும் பட்டத்தை வழங்கினார்.
3. “இஸ்மத் சன்னியாசி” என்பது ஒரு அரபுச் சொல்; அதற்கு “தூய துறவி” என்று பொருள்.

- A. 1 மற்றும் 2
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

139) கீழ்க்கண்டவற்றுள் முடியரசன் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவர் காரைக்குடி மீ.சு உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

2. இவர் பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர்.
3. இவர் தந்தை பெரியார், அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

140) கீழ்க்கண்டவற்றுள் தமிழ்ஒளி பற்றிய சரியான கூற்றைத் தேர்க
1. இவரின் இயற்பெயர் விஜயரங்கம்.
2 இவர் பாரதிதாசனின் வழித்தோன்றலாகவும் பாரதியாரின் மாணவராகவும் விளங்கியவர்.
3. இவர் வாழ்ந்த காலம் 1924 முதல் 1975.

- A. 1 மட்டும்
- B. 2 மட்டும்
- C. 1 மற்றும் 2
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

141) பின்வருவனவற்றை பொருத்துக
(a) கூகைக்காய் 1. தென்னையில் கெட்ட காய்
(b) அல்லிக்காய் 2. கேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
(c) தேரைக்காய் 3. கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்
(d) ஒல்லிக்காய் 4. தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்

- A. 3 4 1 2
- B. 4 3 1 2
- C. 4 3 2 1
- D. 3 4 2 1
- E. விடை தெரியவில்லை

142) கூற்று 1 : உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு சிங்கப்பூர்
கூற்று 2 : மலேசியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

143) “வானூர்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே!” - இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. குடும்ப விளக்கு
- B. அழகின் சிரிப்பு
- C. இருண்ட வீடு
- D. தமிழச்சியின் கத்தி
- E. விடை தெரியவில்லை

144) கீழ்க்கண்டவற்றைக் காலவரிசைப்படுத்துக.
1. சாயர்புரத்தில் போப் கல்வி மற்றும் சமயப்பணி தொடங்கினார்
2. ஜி.யு. போப் தமிழகம் வருகை
3. ஜி.யு. போப் திருமணம்
4. தஞ்சாவூரில் சமயப்பணி

- A. 1–2–4–3

- B. 2–1–3 –4
- C. 2–1 –4 –3
- D. 2–3–4–1
- E. விடை தெரியவில்லை

145) கீழ்க்கண்டவற்றுள் தவறான கூற்றைத் தேர்க.

- A. நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் பயன்படுத்தப்படுகிறது.
- B. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு பயன்படுத்தப்படுகிறது
- C. ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் பயன்படுத்தப்படுகிறது
- D. குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்திலும் பின்பற்றப்படுகிறது
- E. விடை தெரியவில்லை

146) “வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்
பொல்லாத தில்லை” - எனத் திருக்குறளைப் போற்றியவர் யார்?

- A. பாரதியார்
- B. கவிமணி தேசிக விநாயகனார்
- C. பாரதிதாசன்
- D. நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்
- E. விடை தெரியவில்லை

147) “சாதல்எனில் இருவருமே சாதல் வேண்டும்
தவிர்வது எனில் இருவருமே தவிர்தல் வேண்டும்!” - இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. இருண்டவீடு
- B. புரட்சிக்கவி
- C. பாண்டியன் பரிசு
- D. சேரதாண்டவம்
- E. விடை தெரியவில்லை

148) “பசுமை நிறைந்த நினைவுகளே!
பாடித் திரிந்த பறவைகளே!” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. முத்தையா
- B. துரைராசு
- C. சொ. விருத்தாசலம்
- D. விஜயரங்கம்
- E. விடை தெரியவில்லை

149) உ.வே.சா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. இவரின் பிறந்த நாள் தமிழக அரசால் 2024-ஆம் ஆண்டு முதல் "தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கடைபிடிக்கப்படுகிறது.
2. உ.வே.சா. விருது தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.
3. உ.வே.சா. விருது 2002-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மட்டும்
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

150) கூற்று [A] : உ.வே. சா அவர்களின் தமிழ்ப்பணி வெளிநாட்டு அறிஞர்களாலும் பாராட்டப்பட்டது.
காரணம் [R] : இவர் பல பழமையான தமிழ் நூல்களை அச்சிட்டு வெளியிட்டார்.

- A. (A) மற்றும் (R) சரி, (R) - ஆனது (A)-ன் சரியான விளக்கம்.
- B. (A) மற்றும் (R) சரி, (R) - ஆனது (A)-ன் சரியான விளக்கம் அல்ல
- C. (A) சரி ஆனால் (R) தவறு
- D. (A) தவறு ஆனால் (R) சரி
- E. விடை தெரியவில்லை

151) “உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்” பெருஞ்சித்திரனார் அவர்களால் எப்போது நிறுவப்பட்டது?

- A. 1980
- B. 1981
- C. 1982
- D. 1983
- E. விடை தெரியவில்லை

152) “புல்லாய்ப் பிறந்தேன் நானென்று - நீ
புலம்ப வேண்டாம்; நெல்கூட” - இப்பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

- A. இது எங்கள் கிழக்கு
- B. பூமியைத் திறக்கும் பொன்சாவி
- C. திண்ணையை இடித்துத் தெருவாக்கு
- D. விரல்நுனி வெளிச்சங்கள்
- E. விடை தெரியவில்லை

153) உவே.சா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது/எவை?
1. உவே.சா இயற்பெயர் சாமிநாதன்
2. இவருடைய காலம் 1855 – 1942
3. அவரது ஆசிரியர் அவருக்கு “வேங்கடரத்தினம்” என்ற பெயர் வைத்தார்.
4. அவருடைய ஆசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் ஆவார்

- A. 1 மற்றும் 3
- B. 1, 3 மற்றும் 4
- C. 1, 2, 3 மற்றும் 4
- D. 2 மட்டும்
- E. விடை தெரியவில்லை

154) உவே.சா பதிப்பித்த நூல்கள் தொடர்பான சரியான இணைகளைக் கண்டறிக
(நூல்) (பதிப்பித்த ஆண்டு)
1. சிலப்பதிகாரம் - 1892
2. மணிமேகலை - 1898
3. பதிற்றுப்பத்து - 1903
4. ஐங்குறுநூறு - 1904
5. தமிழ் விடு தூது - 1930

- A. 1, 2 மற்றும் 3
- B. 2, 3 மற்றும் 4
- C. 1, 4 மற்றும் 5
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

155) ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்த முதல் பெண்மணி யார்?

- A. கடலூர் அஞ்சலையம்மாள்
- B. வேலு நாச்சியார்
- C. அம்புஜத்தம்மாள்
- D. உடையாள்
- E. விடை தெரியவில்லை

156) கீழ்க்கண்டவற்றுள் கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகளில் பொருந்தாதவை எது?

- A. திருக்குறளும் கடவுளும்
- B. தமிழர் சமுதாயம்
- C. விதியோ வினையோ
- D. கழைக்கூத்தியின் காதல்
- E. விடை தெரியவில்லை

157) பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் தொடர்பான தவறான இணை எது?

- A. வித்தியாரம்பம் - கல்வித் தொடக்கம்
- B. வித்தியாப்பியாசம் - கல்விப் பயிற்சி
- C. குழிமாற்று - பெருக்கல் வாய்பாடு
- D. அக்ஷராப்பியாசம் - கவிதைப் பயிற்சி
- E. விடை தெரியவில்லை

158) ஜி.யு. போப் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. ஜி.யு. போப் தனது பத்தொன்பதாம் அகவையில் தமிழகத்தில் சமயப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. கடல் பயணத்தின் போது தமிழ், தெலுங்கு முதலான திராவிட மொழிகளில் நூல்களைக் கற்றார்.
3. தமிழ்ச் செய்யுட்கலம்பகம் என்ற நூலை இயற்றினார்.

- A. 1 மட்டும்
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

159) “மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்” - என்ற பாடல் அடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?

- A. தமிழ் விடு தூது
- B. சிலப்பதிகாரம்
- C. தொல்காப்பியம்
- D. சீவக சிந்தாமணி
- E. விடை தெரியவில்லை

160) தமிழ் ஆட்சி மொழியாகத் திகழும் நாடுகளில் தவறானது எது?

- A. இலங்கை
- B. சிங்கப்பூர்
- C. பிஜித்தீவு
- D. மலேசியா
- E. விடை தெரியவில்லை

161) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் இயற்றிய நூலைத் தேர்க.

- A. திருக்குறள் தமிழ் மரபுரை
- B. திருக்குறள் மரபுரை
- C. திருக்குறள் உரை
- D. திருக்குறள் புது உரை
- E. விடை தெரியவில்லை

162) கீழ்க்கண்டவற்றுள் கண்ணதாசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவர் சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக 1980ல் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
2. இவர் தமிழக அரசின் இரண்டாவது அரசவைக் கவிஞர்.
3. இவர் கடைசியாக எழுதிய பாடல் ஏசுதாஸ் குரலில் அமைந்த ‘கண்ணே கலைமானே’ பாடலாகும்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3

- E. விடை தெரியவில்லை

163) பெருஞ்சித்திரனார் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளைக் கருத்தில் கொள்க
1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மாணிக்கம்.
2. அவர் “பாவலரேறு” என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்.
3. இவரின் படைப்புகள் 2008-ல் நாட்டுடைமை ஆக்கப்பட்டன
4. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழர் நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார்.
மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது/எவை ?

- A. 1 மற்றும் 2
- B. 1, 2 மற்றும் 3
- C. 2, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

164) தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் விருதுகள் தொடர்பான பின்வரும் இணைகளில் சரியானது எவை?
1. தமிழக அரசு - கலைமாமணி
2. மத்திய அரசு - பத்ம விபூஷன்
3. தருமபுர ஆதீனம் - பல்கலைச் செல்வர்
4. குன்றக்குடி ஆதீனம் - பன்மொழிப்புலவர்

- A. 1 மற்றும் 2
- B. 1 மட்டும்
- C. 1, 3 மற்றும் 4
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

165) கூற்று 1 : தமிழ்மொழியானது திராவிடமொழிகளான கன்னடம், தெலுங்கு,
மலையாளம், துளுவம் முதலிய மொழிகளுக்குத் தாய்மொழியாகத்
திகழ்கிறது.
கூற்று 2 : அது பிராகுயி முதலான வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக
விளங்குகிறது என்பார் ஜி.யு.போப்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

166) நடுத்திராவிட மொழிகளில் பொருந்தாதது எது?

- A. தெலுங்கு
- B. பெங்கோ
- C. தோடா
- D. கோண்டி
- E. விடை தெரியவில்லை

167) ஜி.யு. போப் இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் ________ , ________ கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

- A. தமிழ், ஆங்கிலம்
- B. வடமொழி, தெலுங்கு
- C. தெலுங்கு, தமிழ்
- D. தமிழ், வடமொழி
- E. விடை தெரியவில்லை

168) ‘உயர்தனிச் செம்மொழி’ எனும் ஆங்கில நூல் யாரால் எழுதி வெளியிடப்பட்டது?

- A. பரிதிமாற் கலைஞர்
- B. தேவநேயப்பாவாணர்

- C. ச. அகத்தியலிங்கம்
- D. முனைவர் எமினோ
- E. விடை தெரியவில்லை

169) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் பற்றிய தவறான கூற்றைத் தேர்க.
1. இவருக்கு ‘புரட்சிக்கவி’ என்ற பட்டத்தை வழங்கியவர் அறிஞர் அண்ணா.
2. பாரதிதாசன் விருதினைப் பெற்ற முதல் கவிஞர் முடியரசன்.
3. இவர் பாரதிதாசன் 1952இல் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும் 2
- C. 2 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

170) பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்களில் தவறானது எது?
1. உலகியல் நூறு
2. பாவியக்கொத்து
3. கனிச்சாறு
4. இளமை விடியல்
5. மகபுகுவஞ்சி

- A. 4 மற்றும் 5
- B. 1, 2 மற்றும் 3
- C. 4 மட்டும்
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

171) கூற்று 1 : திருமூலரின் திருமந்திரத்தில் “அகராதி” என்னும் சொல் முதன்முதலாக இடம் பெற்றுள்ளது.
கூற்று 2 : வீரமாமுனிவர் அவர்கள் “ஆதி” என்பது வடமொழிச் சொல் என்பதால், இதற்கு “அகரமுதலி” எனப் பெயர் மாற்றினார்.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

172) தமிழர்கள் தம் எண்ணங்களை வெளிப்படுத்த கருவியாகப் பயன்பட்டவை எது/எவை?
1. மெய்ப்பாடுகள்
2. சைகைகள்
3. ஒலிகள்
4. ஓவியங்கள்

- A. 1 மற்றும் 2
- B. 1, 2 மற்றும் 3
- C. 2 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை

173) கூற்று I : ஜி.யு. போப் தமிழ் இலக்கணத்தை ‘Elementary Tamil Grammar’ என இரண்டு பாகமாக எழுதினார்
கூற்று II : மேலைநாட்டார் தமிழை எளிதில் கற்றக் கொள்ளும் வகையில் தமிழ்–ஆங்கில அகராதி ஒன்றையும், ஆங்கிலம்–தமிழ் அகராதி ஒன்றையும் போப் வெளியிட்டார்

- A. கூற்று I மட்டும் தவறு
- B. கூற்று II மட்டும் தவறு
- C. கூற்று இரண்டும் தவறு

- D. கூற்று இரண்டும் சரி
- E. விடை தெரியவில்லை

174) பின்வரும் இணைகளில் எத்தனை இணைகள் தவறாகப் பொருந்தியுள்ளன?
1. இந்திய நாடு மொழிகளின் காட்சி சாலை - ச. அகத்தியலிங்கம்
2. மால்தோ, தோடா, கோண்டி முதலான
மொழிகள் பற்றிய ஆய்வுகள் - பிரான்சிஸ் எல்லிஸ்
3. மற்ற ஐரோப்பிய மொழிகளோடு
தொடர்புடையது வடமொழி - வில்லியம் ஜோன்ஸ்

- A. ஓர் இணை
- B. இரண்டு இணைகள்
- C. மூன்று இணைகள்
- D. இவற்றில் எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

175) கீழ்க்கண்டவற்றுள் பாரதிதாசன் பற்றிய சரியான கூற்றைத் தேர்க.
1. இவரின் காலம் 29.04.1891 முதல் 21.04.1954 வரை வாழ்ந்தார்.
2. இவரின் பெயரில் விருது 1968-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.
3. இவர் பதினாறு வயதில் சென்னை அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

- A. 1 மட்டும்
- B. 1 மற்றும் 2
- C. 2 மற்றும் 3
- D. இவற்றில் எதுவும் இல்லை
- E. விடை தெரியவில்லை

176) பின்வருவனவற்றைப் பொருத்துக
(நூல்) (ஆசிரியர்)
(a) வள்ளுவர் கண்ட நாடும் காமமும் 1. கருவை பழனிசாமி
(b) வள்ளுவர் வகுத்த அரசியல் 2. சி. இலக்குவனார்
(c) திருக்குறளில் மரபும் திறனும் 3. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
(d) திருக்குறள் மெய்ப்பொருளுரை 4. பெருஞ்சித்திரனார்

- A. 2 4 3 1
- B. 2 1 3 4
- C. 3 2 1 4
- D. 2 4 1 3
- E. விடை தெரியவில்லை

177) தெ. பொ. மீனாட்சிசுந்தரம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?
1. இவர் தமிழ் மொழி ஆய்வின் முன்னோடி என அறியப்படுகிறார்
2. சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞராகப் பணியாற்றியவர்
3. இவர் பாண்டிச்சேரியில் பள்ளி ஒன்றை நிறுவினார்

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 2 மற்றும் 3
- D. எதுவுமில்லை
- E. விடை தெரியவில்லை

178) உவே.சா தொடர்பான தவறான கூற்றினைத் தேர்க.

- A. உவே.சா நூலகம் 1942 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, சென்னையின் பெசண்ட் நகரில் செயல்பட்டு வருகிறது
- B. ஜி. யு. போப் மற்றும் சூலியன் வில்சன் ஆகிய வெளிநாட்டு அறிஞர்கள், உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டியுள்ளனர்
- C. இந்திய அரசு 2005 ஆம் ஆண்டு உவே.சா. அவர்களைப் பெருமைப்படுத்த அஞ்சல்தலை வெளியிட்டது

- D. இவரின் வாழ்க்கை வரலாறு ஆனந்த விகடன் இதழில் ‘என் சரிதம்’ எனும் பெயரில் வெளிவந்தது
- E. விடை தெரியவில்லை

179) உ. வே. சா பெற்ற பட்டங்களில் சரியானது எது/எவை?
1. திராவிட வித்தியா பூஷணம்
2. தாக்ஷிணாத்திய கலாநிதி
3. மகாமகோபாத்தியாய
4. தமிழ்த் தாத்தா

- A. 1 மற்றும் 2
- B. 1, 3 மற்றும் 4
- C. 1, 2, 3 மற்றும் 4
- D. 2 மற்றும் 4
- E. விடை தெரியவில்லை

180) தமிழ்க் காப்புக் கழகம் என்ற அமைப்பைத் தொடங்கியவர் யார்?

- A. பெருஞ்சித்திரனார்
- B. தேவநேயப் பாவாணர்
- C. சி. இலக்குவனார்
- D. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
- E. விடை தெரியவில்லை

181) கீழ்க்கண்டவற்றுள் கவிஞர் தமிழ் ஒளியின் இதழைத் தேர்க.

- A. திராவிட நாடு
- B. சனயுகம்
- C. தாமரை
- D. புது வாழ்வு
- E. விடை தெரியவில்லை

182) “திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது; காந்தி தூவிய விதை யாராகத் தோன்றியது” என்று இராஜாஜி யாரைப் பாராட்டினார்?

- A. பாரதிதாசன்
- B. நாமக்கல் கவிஞர்
- C. வ.உ.சி
- D. திரு.வி.க.
- E. விடை தெரியவில்லை

183) ஹீராஸ் பாதிரியார் குறிப்பிடும், தமிழ் எனும் சொல்லில் இருந்து திராவிடா என்ற சொல் பிறந்தது என்ற கோட்பாட்டின் சரியான வரிசை எது?

- A. தமிழ் ? தமிலா ? தமிழா ? டிரமிலா ? ட்ரமிலா ? த்ராவிடா ? திராவிடா
- B. தமிழ் ? தமிழா ? தமிலா ? டிரமிலா ? ட்ரமிலா ? த்ராவிடா ? திராவிடா
- C. தமிழ் ? தமிழா ? தமிலா ? ட்ரமிலா ? டிரமிலா ? த்ராவிடா ? திராவிடா
- D. தமிழ் ? தமிழா ? தமிலா ? டிரமிலா ? ட்ரமிலா ? திராவிடா ? த்ராவிடா
- E. விடை தெரியவில்லை

184) ஜி.யு. போப் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?
1. இவர் திருக்குறள் மற்றும் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்
2. இவரே திருக்குறளை முதன் முதலாக முழுமையாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்
3. ஜி.யு.போப்பின் ஆகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுவது அவரது திருக்குறள் மொழிபெயர்ப்பு.

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 3 மட்டும்
- D. எதுவுமில்லை

- E. விடை தெரியவில்லை

185) கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையைக் கண்டறிக

- A. நூரு - கன்னடம்
- B. மரம் - மலையாளம்
- C. நாலு - தெலுங்கு
- D. ஒஞ்சி - துளு
- E. விடை தெரியவில்லை

186) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) தமிழ் 1. லீலா திலகம்
(b) கன்னடம் 2. தொல்காப்பியம்
(c) தெலுங்கு 3. பாரதம்
(d) மலையாளம் 4. கவிராஜ மார்ககம்

- A. 2 4 3 1
- B. 2 1 3 4
- C. 3 1 2 4
- D. 2 4 1 3
- E. விடை தெரியவில்லை

187) கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்க.

- A. இளைஞர் இலக்கியம்
- B. எதிர்பாராத முத்தம்
- C. கழைக்கூத்தியின் காதல்
- D. குழந்தை இலக்கியம்
- E. விடை தெரியவில்லை

188) கீழ்க்கண்ட கூற்றுகளைக் கருத்தில் கொள்க
கூற்று I : பாவாணர் தமிழைச் செம்மொழி என வகைப்படுத்த பதினாறு தகுதிகளை முன்வைத்தார்.
கூற்று II : பாரதிதாசன் தமிழின் நிலைத்தன்மையை “என்றுமுள தென்தமிழ்” என எடுத்துரைத்தார்.

- A. கூற்று I மட்டும் சரி
- B. கூற்று II மட்டும் சரி
- C. கூற்று இரண்டும் சரி
- D. கூற்று இரண்டும் தவறு
- E. விடை தெரியவில்லை

189) உ. சா வே. பதிப்பித்த நூல்கள் தொடர்பான சரியான இணைகள் எது/எவை?
நூல் நூல்களின் எண்ணிக்கை
1. மும்மணிக்கோவை - 3
2. தூது - 8
3. கோவை - 6
4. புராணங்கள் - 12
5. இரட்டை மணிமாலை - 2

- A. 1, 2 மற்றும் 3
- B. 3, 4 மற்றும் 5
- C. 1, 2, 3, 4 மற்றும் 5
- D. 5 மட்டும்
- E. விடை தெரியவில்லை

190) பின்வருவனவற்றைப் பொருத்துக
(a) முக்கால் வீசம் 1. 3/20
(b) மூன்று மா 2. 3/16

(c) மூன்று வீசம் 3. 3/64
(d) முக்காணி 4. 3/80

- A. 2 1 3 4
- B. 3 1 4 2
- C. 3 1 2 4
- D. 2 3 1 4
- E. விடை தெரியவில்லை

191) வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றைத் தமிழில் எழுதியவர் யார்?

- A. சீனிவாசப் பிள்ளை
- B. முத்துசாமிப் பிள்ளை
- C. கோதண்டராமன்
- D. வைகுண்டராமன் பிள்ளை
- E. விடை தெரியவில்லை

192) “கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்” - இப்பாடலின் ஆசிரியர் யார்?

- A. கவிமணி
- B. முடியரசன்
- C. மக்கள் கவிஞர்
- D. நாமக்கல் கவிஞர்
- E. விடை தெரியவில்லை

193) “உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறாநிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் யாரும் இல்லை” என்று மாணிக்கவாசகருக்குப் புகழாரம் சூட்டியவர் யார்?

- A. ஜி.யு.போப்
- B. வீரமாமுனிவர்
- C. ஏரியல்
- D. கிரௌல்
- E. விடை தெரியவில்லை

194) “ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி” என்ற தொடரின் மூலம் மொழிப்பற்றைப் பெருமைப்படுத்தியவர் யார்?

- A. அறிஞர் அண்ணா
- B. காந்தி
- C. தந்தை பெரியார்
- D. பாரதிதாசன்
- E. விடை தெரியவில்லை

195) கூற்று 1 : உதகையில் போப்பின் கல்விப் பணிக்காக இங்கிலாந்தின் கந்தர் புரி அத்தியட்சர் ‘மறைநூற் புலவர்’ எனும் பட்டம் அளித்தார்.
கூற்று 2 : தமிழக அரசு சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் ஜி.யு. போப்பின் உருவச்சிலை அமைத்து பெருமைப்படுத்தியுள்ளது.

- A. கூற்று 1 சரி; கூற்று 2 தவறு
- B. கூற்று 1 தவறு; கூற்று 2 சரி
- C. கூற்று 1 தவறு; கூற்று 2 தவறு
- D. கூற்று 1 சரி; கூற்று 2 சரி
- E. விடை தெரியவில்லை

196) தமிழ் மொழியின் தொன்மை தொடர்பான கூற்றுகளில் சரியானது எது?
1. வினையே ஆடவர்க்கு உயிராகக் கருதினர்.
2. சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினர்
3. புகழெனில் உயிரும் கொடுக்க முனைந்தனர்; பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர்.

- A. 1 மற்றும் 2
- B. 1 மற்றும் 3
- C. 1, 2 மற்றும் 3
- D. 2 மற்றும் 3
- E. விடை தெரியவில்லை

197) “தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடாதே” - இக்கூற்றுக்குப் பொருத்தமானவர் யார்?

- A. நாமக்கல் கவிஞர்
- B. பெரியார்
- C. பாரதிதாசன்
- D. அண்ணா
- E. விடை தெரியவில்லை

198) தெ. பொ. மீனாட்சிசுந்தரம் இயற்றிய ஆங்கில நூல்களில் எத்தனை நூல்கள் சரியாக உள்ளன?
1. Philosophy of Thiruvalluvar
2. Advaita in English
3. A History of Tamil Language
4. A History of Tamil Literature

- A. ஒன்று
- B. இரண்டு
- C. மூன்று
- D. நான்கு
- E. விடை தெரியவில்லை

199) உ. வே. சா - வின் ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் இடங்களில் தவறானது எது?

- A. கீழ்த்திசை சுவடி நூலகம் - சென்னை
- B. அரசு ஆவணக்காப்பகம் - மதுரை
- C. உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் - சென்னை
- D. சரஸ்வதி நூலகம் - தஞ்சை
- E. விடை தெரியவில்லை

200) ஜி.யு. போப் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது?
1. இவரின் காலம் - 24, ஏப்ரல் 1820 - 11, பிப்ரவரி 1908
2. கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட நூல்களை உடன் வைக்க வேண்டும் என்று விரும்பினார்
3. புறநானூறு பாடல்கள் சிலவற்றை ‘The Four Hundred Songs of War and Wisdom: An Anthology of Poems from Classical Tamil, the Purananuru’ என்ற பெயரில் மொழிபெயர்த்தார்

- A. 1 மற்றும் 2
- B. 2 மற்றும் 3
- C. 1 மற்றும் 3
- D. அனைத்தும்
- E. விடை தெரியவில்லை